DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S. C.No.223/2020

Prosecution side witness for P.W.8

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. அனிஸ்டன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2025.**

A1 to A3 are present.

<u>முதல்விசாரணை:-</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி வெள்ளப்பட்டி ஐம்பது வீட்டு மீனவர் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது சத்யா வேர்ஹவுசில் வேலை பார்க்கிறேன். 2019 ஆம் வருடம் பைபர் போர்ட் வைத்து கடல் தொழில் செய்து வந்தேன். அப்போது என்னுடன் எங்கள் ஊரை சேர்ந்த சுசி என்ற அந்தோணிமுத்துவும் வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சின்னத்துரையை தெரியும். அவரும் எங்கள் ஊர்க்காரர்தான். கடந்த 5,6 வருடங்களுக்கு முன்பாக நானும், என்னுடன் வேலை பாக்கும் சுசி என்ற அந்தோணிமுத்துவும் வேலைக்கு சென்றோம். நாங்கள் யாரையும் கடலிலிருந்து காப்பாற்றி கரைக்கு கூட்டி வரவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை. ஊருக்குள் சொல்லிக்கொண்டார்கள், யாரோ கடலில் விழுந்துவிட்டதாக சொன்னார்கள். அது யார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விசயமும் கேள்விப்படவும் இல்லை. போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவும் இல்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 06.07.2019 ஆம் அதிகாலை சுமார் 3.00 மணிக்கு நானும், என்னுடன் வேலைபார்க்கும் சுசியும் வேலைக்கு சென்றோம் என்றும், வெள்ளப்பட்டி கடற்கரையிலிருந்து சுமார் 3 கடல்மைல் தொலைவில் எங்களது படகில் இருந்த வலைகளை கடலில் பரப்பிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அதிகாலை சுமார் 4.30 மணியளவில் கடலில் ஒரு திசையிலிருந்து யாரோ உதவிக்கு கூப்பிடுவதுபோல் எங்களுக்கு சத்தம் கேட்டது என்றும், நாங்கள் கடலில் 4 பக்கமும் சுற்றி பார்த்தோம் என்றும், பரப்பிய வலைகளை அப்படியே போட்டுவிட்டு சத்தம் கேட்ட திசையை பார்த்து படகை கொண்டு

சென்றோம் என்றும், அப்போது கடலில் ஒருவர் தத்தளித்து கொண்டிருந்தார் என்றும், நாங்கள் அவரை தூக்கி எங்கள் படகில் ஏற்றியபின்புதான் அவர் எங்கள் ஊரை சேர்ந்த அந்தோணிமகாராஜன் என்பது தெரியவந்தது என்றும், நாங்கள் அவரிடம் விவரம் கேட்க அவர் எதுவும் கூறாமல் பயந்தநிலையில் சுயநினைவு இல்லாதது போன்று இருந்தார் என்றும், நாங்கள் உடனே அந்த தகவலை எங்களது போன் மூலம் அந்தோணிமகாராஜா வீட்டிற்கு கூறினோம் என்றும், நாங்கள் கரைக்கு வரவும் எங்கள் ஊர்க்காரர்கள் தயார்நிலையில் வைத்திருந்த ஆட்டோவில் ஏற்றி அந்தோணிமகாராஜாவை ஏவிஎம் மருத்துவமனைக்கு கொண்டுபோனோம் என்றும், பின்புதான் அந்தோணிமகாராஜாவின் அப்பாவான அந்தோணி சின்னதுரை கடலில் காணாமல் போனதாக தருவைகுளம் கடல்சார்காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்து விசாரித்தார்கள் என்றும், 06.07.2019 ஆம் தேதி மேற்படி கடல் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தோம் என்றும், பின்பு அந்தோணிமகாராஜாவின் தாயான ரெஸ்லின்மேரிக்கும், எங்கள் ஊரை சேர்ந்த அற்புதமணி என்ற சேகர்மணி என்பவருக்கும் கள்ளதொடர்பு இருப்பதும், அவர்கள் சேர்ந்து இருவரும் திட்டம்போட்டு அந்தோணிமகாராஜாவுடன் சேர்ந்து சின்னத்துரையை சவுக்கு கம்பால் அடித்து கடலில் தள்ளி கொலை செய்துள்ளார் என்பதை கேள்விப்பட்டோம் என்றும், ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S. C.No.223/2020

Prosecution side witness for P.W.9

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. சுசி என்ற அந்தோணிமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2025.**

A1 to A3 are present.

<u>முதல்விசாரணை:–</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி வெள்ளப்பட்டி அதிசய கடல்மாதா நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கடல் தொழில் செய்து வருகிறேன். 2019 ஆம் வருடம் அனிஸ்டன் என்பவருடன் அவருடைய பைபர் போர்ட்டில் கடல் தொழில் செய்து வந்தேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சின்னத்துரையை தெரியும். அவரும் எங்கள் ஊர்க்காரர்தான். கடந்த 5, 6 வருடங்களுக்கு முன்பாக நானும், என்னுடன் வேலை பாக்கும் அனிஸ்டன் என்பவரும் படகில் வேலைக்கு சென்றோம். நாங்கள் வலையைவிட்டுக்கொண்டிருந்தோம், அப்போது அங்கே அந்தோணிமகாராஜா என்பவர் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கத்திக்கொண்டிருந்தார். நாங்கள் அவரை காப்பாற்றி கரைக்கு கூட்டி வந்தோம். கரைக்கு வந்தவுடன் ராயப்பன் என்பவர் ஆட்டோவில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு கூட்டி சென்றார். எந்த ஆஸ்பத்திரி என்பது எனக்கு தெரியவில்லை. மீண்டும் கடல் தொழிலுக்கு சென்றுவிட்டோம். அந்தோணி சின்னத்துரை எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது, அதை பற்றி நான் எதையும் கேள்விப்படவும் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விசயமும் கேள்விப்படவும் இல்லை. போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவும் இல்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்களில் சிலவற்றிற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 06.07.2019 ஆம் அதிகாலை சுமார் 3.00 மணிக்கு நான் கடலுக்கு செல்லும்போது, அந்தோணிமகாராஜாவின் தாயான ரெஸ்லின்மேரிக்கும், எங்கள் ஊரை சேர்ந்த அற்புதமணி என்ற சேகர்மணி என்பவருக்கும் கள்ளதொடர்பு இருப்பதும், அவர்கள்

சேர்ந்து இருவரும் திட்டம்போட்டு அந்தோணிமகாராஜாவுடன் சேர்ந்து சின்னத்துரையை சவுக்கு கம்பால் அடித்து கடலில் தள்ளி கொலை செய்துள்ளார் என்பதை கேள்விப்பட்டோம் என்றும், ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S. C.No.223/2020

Prosecution side witness for P.W.10

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. அந்தோணி தொம்மை ராயப்பன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2025.**

A1 to A3 are present.

<u>முதல்விசாரணை:-</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி வெள்ளப்பட்டி கடற்கரை சாலையில் குடியிருந்து வருகிறேன். நான் வெள்ளப்பட்டியில் மீன்வியாபாரம் செய்து வருகிறேன். 2019 ஆம் வருடம் வெள்ளப்பட்டி மீனவர் முன்னேற்ற சங்கத்தில் தலைவராக இருந்து வந்தேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சின்னத்துரையை தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். 06.07.2019 ஆம் தேதி சுமார் காலை 7.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது இந்த வழக்கின் எதிரி அந்தோணிமகாராஜா கடலில் தவறி விழுந்து சீரியசாக இருப்பதாக தகவல் வந்தது. நான் கடற்கரைக்கு சென்றேன். அவர்களை காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்தார்கள். கரைக்கு கொண்டு வந்தவரை நின்றவர்கள் ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எந்த மருத்துவமனை என்று எனக்கு தெரியாது. அந்தோணிமகாராஜா அதன்பின்பு புகார்கொடுத்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது. அந்தோணிசின்னத்துரை எப்படி, யாரால் கொலை செய்யப்பட்டு இறந்தார் என்ற விவரத்தை நான் கேள்விப்பட்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விசயமும் கேள்விப்படவும் இல்லை. போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவும் இல்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்களில் சிலவற்றிற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 06.07.2019 ஆம் தேதி சுயநினைவு இல்லாமல் மயங்கிய நிலையில் கடலில் காப்பாற்றி கரைக்கு அனிஸ்டன் என்பவர் கொண்டு வந்தபோது நான்தான் அவரை ஆட்டோ ஏற்பாடு செய்து ஆட்டோவில் ஏற்றி ஏவிஎம் மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம் என்றும், பின்பு சுமார் ½ மணி நேரம் கழித்து அந்தோணிமகாராஜாவிற்கு

மயக்கம் தெளிந்தது என்றும், என்ன நடந்தது என்று கேட்டபொழுது அவர்கள் படகில் சென்றுகொண்டிருந்தபோது, அந்தோணி சின்னத்துரை கடலில் தவறி விழுந்ததாகவும், அவரை காப்பாற்றுவதற்காக அந்தோணி மகாராஜா கடலில் குதித்ததாகவும் கூறினார். அதனால் தனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டதாகவும், இது தொடர்பாக அந்தோணி மகாராஜா தருவைகுளம் கடல்சார் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் அக்காவல்நிலைய ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும், அதன்பின்பு அந்தோணிமகாராஜாவின் தாயான ரெஸ்லின்மேரிக்கும், எங்கள் ஊரை சேர்ந்த அற்புதமணி என்ற சேகர்மணி என்பவருக்கும் கள்ளதொடர்பு இருப்பதும், அவர்கள் சேர்ந்து இருவரும் திட்டம்போட்டு அந்தோணிமகாராஜாவுடன் சேர்ந்து சின்னத்துரையை சவுக்கு கம்பால் அடித்து கடலில் தள்ளி கொலை செய்துள்ளார் என்பதை கேள்விப்பட்டோம் என்றும், ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)